**மே - 24**

**"அன்பு சினமடையாது" - 1 கொரி 13 : 5**

இயற்கையான சீர்கேடும் (பாவத்திற்கு விரைந்தோடும் மனிதனின் பரம்பரையான போக்கு) பரம்பரை குணமும், நரம்பு வியாதிகளும், எப்படியாகிலும் கோபப்படுதலின் ஆவிக்கும், தாராளமாய் பேசாதிருக்கும் ஆவிக்கும், முன்கோபத்தின் ஆவிக்கும் காரணமாய் இருந்தாலும், கர்த்தரின் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிற ஒவ்வொரு இருதயமும் தன்னுடைய மாம்சம்சத்தில் தீமைக்கு இடங்கொடுக்கிற இந்த மனச்சார்பை எதிர்க்க வேண்டும். அதற்கு விரோதமாக ஒரு நல்ல போராட்டத்தையே நடத்த வேண்டும். "இது என்னுடைய வழி" என்று சொல்லுவது போதாது ; ஏனெனில் விழுந்து போன சுபாவத்தின் எல்லா வழிகளுமே கெட்டவைகளாயிருக்கின்றன. மாம்சத்தின் இந்த கிரியைகளிலும் மற்ற கிரியைகளிலுமுள்ள பழைய சுபாவத்தையும், பிசாசையும் ஜெபிப்பது புது சுபாவத்தின் வேலையாயிருக்கிறது. அன்பின் குணசீலத்தின் சக்தியை இதைவிட அதிகமாக கொஞ்சப் பேரே நமது சிநேகிதருக்கும் வீட்டாருக்கும் காண்பிக்கிறார்கள். இந்த குணசீலம் வளரும்போது தேவனின் ஒவ்வொரு பிள்ளையையும், நேசிக்கக் கூடிய குணத்தையுடையவர்களாக்கும். **- Z ’97, 247 (R 2202).**

அன்பு நன்றியுள்ள நல்மனதைக் குறிப்பதோடல்லாமல், மிகவும் விசேஷமாக, நல்ல தத்துவங்களில் சந்தோஷப்படுகிறதும் இவைகளுக்கு இணக்கமாக இருக்கிற குணத்தை உயர்வாக மதிக்கிறதும், இவைகளுக்கு இணக்கமாக இல்லாதவர்களிடத்தில் அனுதாபம் கொள்ளுகிறதும் இரக்கப்படுகிறதும், இவைகளை பரப்பத் தன் ஜீவனைக் கொடுக்க சந்தோஷப்படுகிறதுமான சுயநலமற்ற, தன்னலம் பாராட்டாத நல்மனத்தைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட அன்பு சினமடையாது. ஒரு தீய குணமே இப்படிப்பட்ட அன்புக்கு எதிரானது. அதற்கு மாறாக, இப்படிப்பட்ட அன்பு சாந்தமானதாகவும், நீடிய பொறுமையுள்ளதாகவும், பிழை பொறுக்கிறதாகவும் இருக்கிறது. **- P '34, 63.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

1கொரி 13:4; 2கொரி 6:4-6; கலா 5:22; எபே 4:1,2; கொலோ 1:11,13; 1தீமோ 1:16; 2தீமோ 3:10; 4:2; நீதி 19:11; பிர 7:21; மத் 5:7,39-48; லூக் 6:35-37; ரோம 12:14,17,19,21; 1கொரி 4:12,13; எபே 4:32; 1பேது 3:9.

**கோபுர வாசிப்பு : Z ’12, 273 (R 5090)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் சகிப்புள்ளவனாயிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?